செ.வெ.எண். 12 நாள். 03.08.2017.

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் சாரல் திருவிழா நிறைவு விழா திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-----------

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் திருவிழா 27.07.2017 முதல் 03.08.2017 வரை நடைபெற்றது. நிறைவுவிழா திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (03.08.2017) நடைபெற்றது.

சாரல் திருவிழா நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் பேசியதாவது.

தமிழகத்தில் மிக முக்கியமான சுற்றுலாப் பகுதியாக குற்றாலம் அமைந்துள்ளது. தமிழக அளவில் குற்றாலத்திற்குத்தான் சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் வருகை தந்துள்ளனர். கடந்த 2016 ஆம் ஆண்டு சுமார் 75 இலட்சம் சுற்றுலாப்பயணிகள்வருகை புரிந்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரையிலும் சுமார் 80 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கோடை விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் நடத்தப்பட்டு வருவதைப்போல குற்றாலத்தில் வரலாற்று சிறப்பும் பாரம்பரியமும் மிக்க குற்றால சாரல் விழா ஆண்டு தோறும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

குற்றால சாரல் விழாவில் தோட்டக்கலைத்துறையின் மூலம் மலர்கண்காட்சி சிறப்பாக நடத்தப்பட்டது. ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களில் நடத்தப்பட்ட மலர் கண்காட்சி குற்றாலத்திலும் சிறப்பான முறையில் தோட்டக்கலைத்துறையின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் குற்றால சாரல் திருவிழா பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் கடந்த 8 தினங்களாக நடத்தப்பட்டு வருகிறது. சுற்றுலா துறையின் மூலம் சாரல் திருவிழாவில் 31 கலைநிகழ்ச்சிகளும், கலை பண்பாடு துறையின் மூலம் 10 கலைநிகழ்ச்சிகளும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் 3 கலைநிகழ்ச்சிகளும், மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் 1 கலைநிகழ்ச்சியும், பள்ளி கல்வித்துறையின் சார்பில் 15 கலைநிகழ்ச்சிகளும் என மொத்தம் 55 கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

நீச்சல் போட்டி, மினிமாரத்தான் போட்டி, யோகா போட்டி, வில்வித்தை போட்டி, சுற்றுச்சூழல் குறித்த ஓவியப்போட்டி, சமூக நலத்துறையின் சார்பில் கோலப்போட்டி மற்றும் கொழு, கொழு குழந்தைகள் போட்டி, நாய்கள் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளும் நடத்தப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத்துறையின் சார்பில் மலர்கண்காட்சி, சுற்றுச்சூழல் கண்காட்சி, வாசனை திரவியங்கள் கண்காட்சி உள்ளிட்டவைகளும் நடத்தப்பட்டது.

மேலும், குற்றாலம் பேரூராட்சி பகுதியில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக அடிப்படை வசதிகளான கழிப்பிட வசதிகள், உடைமாற்றும் அறைகள், குடிநீர், வாகன நிறுத்துமிடம் போன்றவற்றை சிறப்பான முறையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையினர், தீயணைப்புத்துறையினர் மற்றும் சுற்றுலாப்பயணிகள் உதவியுடன் குற்றாலம் பகுதியினை தூய்மையான பகுதியாக தொடர்ந்து மேற்கொள்ள பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். சாரல் விழா நடைபெறும் கலையரங்கம் சுற்றுலாத்துறை மூலம் புதுப்பிக்கப்படும் என மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குற்றாலம் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்த திட்டவரைவு தயார் செய்து அனுப்புமாறு தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு வருகிறது. ஒப்புதல் பெற்று நிறைவேற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பேசினார்கள்.

சாரல் விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்த அலுவலர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு பழனி, தென்காசி கோட்டாட்சியர் திரு ராஜேந்திரன், உதவி இயக்குநர் பேரூராட்சிகள் திரு மாஹின் அபுபக்கர், திருநெல்வேலி பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர் திரு ஜோதிமுருகன், சுற்றுலா அலுவலர் திரு நெல்சன், பேரூராட்சி செயல் அலுவலர்கள், (குற்றாலம்) திரு கணேசன், (மேலகரம்) திரு.லிங்கராஜ், (எட்டயபுரம்) திரு குத்தாலிங்கம், (சிவகிரி) திரு வெங்கடகோபு, (கல்லிடைகுறிச்சி) திரு முத்துக்குமார், சுகாதார அலுவலர் திரு. மணிகண்டன் உட்பட அரசு அலுவலர்கள், சுற்றுலாப்பயணிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**